2nd September 1959]

Sri K. VINAYAKAM : வேறு யாராவது தனிப்பட்டவர்கள் இப்படி ஏதாவது ஞாபகார்த்த சின்னத்தை ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு மனு அனுப்பியிருக்கிருர்களா? அவர்கள் அம்மாதிரியாக செய்வதற்கு அரசாங்கம் உதவி புரிய முன் வருவார்களா?

The Hon. Sri C. SUBRAMANIAM : மனு ஒன்றும் யாரும் அனுப்பவில்லை. பாஞ்சாலக் குறிச்சியில், கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட இடத்தில் யாராவது ஞாபகச் சின்னம் ஏற்படுத்துவதற்கு அரசாங்கத்தின் உதவியை நாடினுல் அதை அரசாங்கம் கவனிக்கும்.

Sagupuram Village

* 85 *Q.*—**Sri A. A. RASHEED** : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have received a protest recently from the residents of Sagupuram village in Tirunelveli district against naming their village as Sagupuram; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri M. A. MANICKAVELU : (*a*) No. Sir.

(*b*) Does not arise.

Sri A. A. RASHEED : May I know the original name of this village and what was the necessity to change the name of the village?

The Hon. Sri M. A. MANICKAVELU : இது உச்சரிப்பைப் பொறுத்தது என்று நினைக்கிறேன். சாகு என்பதை சகு என்றும் படிக்கலாம்.

Sri S. B. ADITYAN : காயல்பட்டிணத்தையொட்டிய ஒரு பகுதியாக சரகுபுரம் இருப்பதால் பெயர் வைப்பதற்கு முன் காயல் பட்டிணத்து பஞ்சாயத்தாரின் கருத்து தெரிந்துகொள்ளப்பட்டதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. A. MANICKAVELU : இம்மாதிரி தகவல் ஒன்றும் இல்லை.

Sri M. S. SELVARAJAN : சாகுபுரம் என்று தற்பொழுது பெயரிடப்பட்டிருக்கும் இடத்தில் இதற்கு முன்பு ஒருவிதமான ஊரும், கிராமமும் இல்லை என்பதும், தரிசான காடு மேடாக இருந்ததென்பதும் அரசாங்கத்திற்குத் தெரியுமா? தங்களுக்குச் சொந்தமான இடத்தில் தங்கள் ஸ்தாபனத்திற்கு தங்கள் இஷ்டப்படி பெயர் வைத்ததற்கு தடை செய்கிறவர்கள் மீது அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

The Hon. Sri M. A. MANICKAVELU : கனம் அங்கத்தினர் கேட்கிற விஷயத்தைப்பற்றி என்னிடம் ஒருவித தகவலும் இல்லை. இதுபற்றி கேட்ட கேள்விக்கு இல்லை என்று பதில் சொன்னேன்.

Union President's Tour

* 86 *Q.*—**Sri V. K. KOTHANDARAMAN** : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா

(அ) நமது தேசத்தின் ஜனதிபதி அவர்கள் 1959-ம் ஞு ஜூன் மீ 14வ பெங்களூர் செல்லுகிறர் என்று போலீஸ்காரர்களையும், தோட்டி தலையாரிகளையும் பந்தோபஸ்துக்காகப் போடப்பட்டதா?

(ஆ) எத்தனை போலீஸ்காரர்கள்? எத்தனை தோட்டி தலையாரிகள்?

(இ) போலீஸ்காரர்களுக்காக எவ்வளவு செலவு? தோட்டிதலையாரி களுக்காக எவ்வளவு செலவு?

(ஈ) அவர்களுக்கு உணவு சப்ளை செய்யப்பட்டதா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*), (*b*), (*c*) & (*d*) Bundobust was provided when the President passed through this State on 14th June 1959 *en route* to Bangalore. It is however regretted that the details of the bundobust cannot be furnished for security reasons.

SRI V. K. KOTHANDARAMAN : பந்தோபஸ்துக்காகவேண்டி போடப் பட்ட தலையாரிகள் காலையிலிருந்து சாப்பாடு கூட இல்லாமல், இரவு நேரத்தில் பட்டினியாக திரும்பினார்கள் என்பது சர்க்காரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதா? இனிமேல், இதுபோன்ற நிலைமை இல்லாத அள விற்கு கவனிக்கப்படுமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் அங்கத்தினர் அவர் களிடத்தில் இருக்கிற தகவல் சரியல்ல.

Past-Basic Shools

* 87 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) 1959-ல் ஆரம்பிக்க உத்தேசித்திருக்கும் போஸ்ட்—பேசிக் பள்ளிகள் ஐந்தும் எப்போது ஆரம்பிக்கப்படும்?

(ஆ) அவை ஒவ்வொன்றுக்கும் ஒதுக்கி இருக்கும் தொகை எவ்வளவு?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) The scheme has been deferred for the present.

(*b*) Does not arise.

SRI A. VEDARATHNAM : என்ன காரணத்திற்காக அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது என்று கூற முடியுமா?

THE HON. SRI C. SUBRAMANIAM : இப்பொழுது போதுமான பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் இல்லை. இதைக் கருதி தான் இப்பொழுது ஒரு கல்லூரி ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது. போதுமான ஆசிரியர்கள் வெளி வந்த பிற்பாடு 1960–61-ல் கவனித்து முடிவு செய்யப்படும்.

Pest attack on paddy crops

* 88 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN (on behalf of Sri M. KALYANASUNDARAM) : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) the extent of damage to paddy crop during Samba cultivation due to attack of pest in Lalgudi taluk, Tiruchirappalli district; and

(*b*) whether there is any proposal to postpone collection of kist and loan arrears?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) About 643 acres.

(*b*) Orders have been issued granting the following concessions to the pest-affected areas of the taluk :—

(i) Remission of full wet assessment where only first crop was raised with an outturn of 4 annas and below;